பேரூராட்சி அலுவலகம்,
புதுவயல்.

ந.க.எண்.81/2010

நாள் : 01-06-2010.

# ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம் புதுவயல் பேரூராட்சியில் **2010 – 2011–ம் ஆண்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில்** , கீழ்க்கண்டுள்ள வேலைகளைச் செய்ய இப்பேரூராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 16-06-2010–ம் தேதி புதன்கிழமை மாலை 3-00 மணி வரை செயல்அலுவலர் அவர்களாலோ அல்லது அவரால் அங்கீகாரம் பெற்றவராலோ ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தேதியில் 3-30 மணியளவில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். குறைந்த ஒப்பந்தப் புள்ளிகள் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு பின் ஊர்ஜீதம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்படும்.

வேலைகளுக்கான ஷெட்யூல் படிவங்களை அந்தந்த பணிக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகையினை ரொக்கமாக கீழ்கண்ட விவரப்படி அலுவலகத்தில் செலுத்தி 15-06-2010–ம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 5-30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள் அந்த வேலைக்கு எதிரே குறிப்பிட்டுள்ள டெபாசிட் தொகையை ரொக்கமாக செலுத்தி ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்துக் கொடுக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு முடிவு செய்யப்படும். மேலும் இது சம்மந்தமாக நிபந்தனை மற்றும் விவரங்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளியை மறுதேதிக்கு ஒத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ செயல்அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

மேலும் ஒப்பந்தப்புள்ளி நமுணாக்கள் (http://www.townpanchayats.tn.gov.in http://tenders.tn.gov.in) என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி இணையதளங்களின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி நமுனாக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## விபரம்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை லட்சத்தில் | வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி நமுனாக் கட்டணம் | ஒப்பந்காரரின் வரம்பு | வேலை செய்து முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.11, அரசமரம் முதல் உமையாம்பிகை வேபிரிட்ஜ் வரை தார் சாலை அமைத்தல். | 10.00 | 25000 | 1560 | IV வகுப்பு | 90 நாட்கள் |
| 2. | வார்டு எண்.8, பம்ப் ரூப் அருகில் சமுதாய கூடம் கட்டுதல். | 10.00 | 25000 | 1560 | IV வகுப்பு | 180 நாட்கள் |
| 3. | வார்டு எண்.1, பங்களா ஊரணி ஆழப்படுத்துதல் மற்றும் தடுப்புச் சுவர் கட்டுதல். | 8.00 | 20000 | 780 | V வகுப்பு | 180 நாட்கள் |
| 4. | வார்டு எண்.8, ஆறுமுகம் வீடு முதல் முஸ்லீம் மயானக்கரை வரை, 6வது வார்டு காமராஜர் நகர் குஞ்சியுண்டி கருப்பையா வீடு முதல் சுடுகாடு வரை சிமிண்ட் சாலை அமைத்தல். | 5.00 | 12500 | 780 | V வகுப்பு | 90 நாட்கள் |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை லட்சத்தில் | வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி நமுனாக் கட்டணம் | ஒப்பந்காரரின் வரம்பு | வேலை செய்து முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 5. | பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் வணிக வளாகம் கட்டுதல். | 10.00 | 25000 | 1560 | IV வகுப்பு | 180 நாட்கள் |
| 6. | வார்டு 7, அக்னி பிள்ளையார் கோவில் வீடு முதல் தெற்கு ரத வீதி வரை முஸ்லீம் மயான சாலை மேம்பாடு செய்தல். | 6.00 | 12500 | 780 | V வகுப்பு | 90 நாட்கள் |
| 7. | 1. சாக்கோட்டை மேல ரத வீதி சக்தி சேகர் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 0.75 | 1875 | 312 | V வகுப்பு | 60 நாட்கள் |
| | 2.வார்டு 14, சீனி செட்டியார் வீடு முதல் அரசமரம் வரை தார் சாலை அமைத்தல். | 1.60 | 4000 | 312 | V வகுப்பு | 90 நாட்கள் |
| | 3.மேல ரத வீதி முதல் நாட்டார் கட்டிடம் வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.00 | 2500 | 312 | V வகுப்பு | 60 நாட்கள் |
| | 4.APR காம்ப்ளக்ஸ் முதல் பழைய ஊரணி வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 3.65 | 9125 | 780 | V வகுப்பு | 90 நாட்கள் |

டெண்டர் ஷெட்யூல் படிவம் கட்டணம் நாளுக்கு முந்தைய நாள் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

1. மதிப்பீடு ரூ.5,00,000 மேல் ரூ.1,560 விற்பனை வரி உட்பட
2. மதிப்பீடு ரூ.10,00,000 மேல் ரூ.6,240 விற்பனை வரி உட்பட.

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர், செயல் அலுவலரின் முகவரி எழுதப்பட்டு மற்றும் எந்த வேலை விபரத்தை என்று தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப் புள்ளிதான் அனுப்பவேண்டும்.

2. ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை டேவணித் தொகையாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி இரசீதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இந்த டேவனித் தொகை உரிய அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டவுடன் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படாத ஒப்பந்தக்காரர்களுக்கு திருப்பி அளிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்தக்காரர்களுடைய டேவனித் தொகை வேலைகளுக்கான பிணை வைப்புத் தொகையாக வைத்துக் கொள்ளப்படும். இத்தொகைக்கு பேரூராட்சியால் வட்டி எதுவும் கொடுக்கப்பட மாட்டாது.

3. மதிப்பீடு விலைக்கு கூடுதலாக வேலையைச் செய்வதாகக் குறிப்பிடும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மதிப்பீடு விலைக்கு குறைவாக வேலையைச் செய்வதாக ஒப்புக்கொள்கிறவர்கள் 10% வரை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். 10% மேற்கொண்டு

கூடுதலாக கோரும் சதவிகிதத் தொகை கூடுதல் பிணை வைப்புத் தொகையாகச் செலுத்தினால் தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு பேரூராட்சியில் வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது. கூடுதலாகப் பெறப்பட்ட பின் வைப்புத்தொகை மட்டும் வேலைகள் முடிவுற்று, முடிவு அறிக்கை வந்த பின் திரும்ப வழங்கப்படும்.

4. ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. டேவணித்தொகை செலுத்தப்படாத ஒப்பந்த புள்ளிகளும், உரிய படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்குப் பிறகு பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

6. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்படும். குறைந்த விகித ஒப்பந்தப் புள்ளியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேரூராட்சியை கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.

7. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 3 நாட்களுக்கு குறிப்பிட்ட படிவத்தில் தவறாது சொந்தச் செலவில் ஒப்பந்தக்காரர் வேலைகளை முறையாக முடித்துத் தருவதாக ஒப்பந்தப் பத்திரம் பேரூராட்சிக்கு எழுதிக் கொடுக்கவேண்டும். அவ்வாறு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்க தவறினாலோ அல்லது அதிகப்படியாகச் செலுத்தக் கோரிய டேவனித் தொகையைச் செலுத்தத் தவறினாலோ மறு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்து வேலைகள் முடிக்கப்படும். இதனால் முன் ஒப்பந்தக்காரரின் டேவனித் தொகை பறிமுதல் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு ஆதாயம் செய்யப்படும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்திய டேவனித் தொகை இது சம்பந்தமாக கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையாளரின் முடிவிற்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்படவேண்டும். தணிக்கையாளரின் முடிவிற்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்படவேண்டும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்தக்காரர் பேரூராட்சிக்கு செலுத்தவேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளியைத் திரும்ப பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தக்காரருடைய டேவனித் தொகை பேரூராட்சிக்குப் பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றுக் கொண்டதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் சம்பந்தக்காரர் பொறுப்பு ஆவார்.

10. ஒப்பந்தக்காரர் மனுவில் வேலைகள் மற்றும் சதவீதத்தினை தெளிவாக எழுதியிருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்தக்காரர் கையொப்பம் இட்டிருக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

11. ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும் ஆய்வு செய்யும் அலுவலர்கள், பொறுப்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டால், அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் அகற்றிக் கொள்ளவேண்டும்.

12. இதில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் வேலை முடிவுற்று 6 மாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் சரிசெய்து கொடுக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பின் வைப்புத் தொகையிலிருந்து பேரூராட்சியில் பழுது பார்க்கப்படும்.

13. ஒப்பந்தப் பத்திரம் எழுதி முடித்த தேதியிலிருந்து ஒருவார காலத்திற்குள் வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்க வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலை முடிக்கப்படவில்லையானால் மதிப்பீடு தொகையில் 1/2 வீதம் வேலை முடிக்கப்படும் வரை குறிப்பிட்ட தேதியிலிருந்து தினசரி அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும். வேலையை குறித்த காலத்திற்குள் முடிக்கப்படவில்லையானால், அதனால் பேரூராட்சிக்கு ஏற்படும் நஷ்டத்தை வசூலிக்க நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அபராதக் கட்டணம் விதிக்கப்பட்டதற்கு பிறகும் வேலையை முடிக்கவில்லையானால் பின் வைப்புத் தொகையை பறிமுதல் செய்யவும், மறு ஒப்பந்தப் புள்ளி கோரி வேலையை முடிக்கவும் பேரூராட்சிக்கு அதிகாரம் உண்டு. இதனால் உண்டாகும் இழப்பீடுகளுக்கு ஒப்பந்தகாரரே பொறுப்பாவார்.

14. தொழில்நுட்ப அலுவலரின் அறிவுரையின்படி தார்சாலை அமைக்கத் தேவைப்படும் தார் அனுமதிக்கப்பட்ட விலையில் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒப்பந்தகாரரே தன் சொந்தப் பொறுப்பில் வாங்கிப் பயன்படுத்த வேண்டும். அதற்கான ரசீதுகள் பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.

15. தார்சாலை அமைக்கத் தேவைப்படும் ரோலர் , ஹீட்மாஸ்டர் கலவை இயந்திரம் மற்றும் இதர தளவாடச் சாமான்கள் ஒப்பந்தகாரர் தன் சொந்தப் பொறுப்பில் எடுத்து வேலை செய்யப்பட வேண்டும். அதற்கான ரசீதுகள் மற்றும் லாக் சீட்டுகள் பட்டியலுடன் இணைக்கப்படவேண்டும்.

16. பட்டியல் விதிமுறைப்படி ரூ.10,000/- க்கு மேல் செய்யப்படும் வேலைகளுக்கு வருமானவரி, விற்பனை வரி பிடித்தம் கண்டிப்பாக செய்யப்படும்.

17. வேலை உத்திரவு வழங்கப்பட்டவுடன் மதிப்பீட்டில் 0.3% கட்டிடத் தொழிலாளர் நல நிதிக்கு வங்கி கேட்பு வரை வோலையாக பேரூராட்சி அலுவலகத்தில் வழங்க வேண்டும்.

18. ஏற்கனவே இப்பேரூராட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்காத ஒப்பந்தகாரர்களுக்கு வேலைக்கான ஷெட்டியூல் வழங்கப்பட மாட்டாது.

19. பணி நடைபெறும் இடத்தில், திட்டத்தின் பெயர், மதிப்பீடு, பணியின் விபரம், பணிக்கான கால அளவு, ஒப்பந்தகாரர் பெயர் ஆகிய விபரங்கள் அடங்கிய தகவல் பலகை கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்,
புதுவயல் பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

**பெறுநர்:**

திரு…………………………………..
பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்
புதுவயல் பேரூராட்சி.

**நகல்:**

1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), சிவகங்கை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்), சிவகங்கை அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
5. இளநிலைப் பொறியாளர் (பேரூராட்சிகள்), கோட்டையூர் தொகுப்பு அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
6. பணி ஆய்வாளர் (பேரூராட்சிகள்), கோட்டையூர் தொகுப்பு அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.